[1968 ஆகஸ்ட் 19

திரு. எம். சுரேந்திரன்: கிராமங்களில் உள்ள ஹரிஜனச் சேரிகள் பலயிடங்களில் மோசமாகயிருக்கின்றன. வீட்டு வசதி, குடி தண்ணீர் வசதி இவையெல்லாம் சரிபெற நடைபெறுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி, தாழ்த்தப் பட்டோர் நல கூட்டு நெறியாளர் பதவிபற்றியது. அதைப்பற்றிக் கேளுங்கள்.

(உறுப்பினர் வினா கேட்கவில்லை.)

விதவைகளுக்குப் பள்ளி

* 37 வினா.—**திருமதி வி. ப. பழனியம்மாள்:** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத்திலும், விதவைகளுக்கென்று ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்க அரசாங்கம் ஆவன செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள்: ஒவ்வொரு மாவட்டத்திலும் இளம் விதவைகளுக்கு பள்ளிப்படிப்பும், மற்றவர்களுக்கு வயதிற் கேற்றவாறு தொழில் கல்வியும் கற்றுக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது கோவை, சேலம், மதுரை, திருச்சி போன்ற இடங்களில் சேவை இல்லங்கள் என்ற இல்லங்கள் நடைபெறுகின்றன. அந்த இல்லங்களில் விதவைகள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். தனியாக விதவைகளுக்கு எந்த இல்லமும் அரசாங்கம் துவக்க உத்தேச மில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: இளம் பெண்கள் விதவைகளாகி விடுகிறார்கள். அவர்களுக்கு மறுமணம் செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ? சில சமூகங்களில் கணவனை இழந்து விட்டால் விதவைகளாக காலத்தை கடத்தி விட வேண்டி யிருக்கிறது. அப்படிக் கடத்தி விடுகிறார்கள். சில ஜாதிகளில் மறுமணம் செய்து கொள்கிறார்கள். அதுமாதிரி செய்ய ஏதாவது ஏற்பாடு உண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அவர்கள் இந்த சமூக சீர்திருத்தக் கருத்தை சமூகத்தில் பரப்பு வாரானால் அது மிக வெற்றிகரமாக முடியும் என்று கருதுகிறேன்.

கூட்டுறவு நாணய சங்கங்கள்

* 38 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—